இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 02.12.2025

# காக்கும் அரசு!

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வட தமிழ்நாடு - புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் நிலவிய 'டிட்வா' புயலில் இருந்து மக்களைக் காக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு முன் கூட்டியே எடுத்தது. அதனால் எந்தப் பாதிப்பும் இல்லாமல் மக்கள் காக்கப்பட்டார்கள்.

புதிய புயல் உருவாகிறது என்று தெரிய வந்ததுமே சென்னை எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து, முன் எச்சரிக்கைப் பணிகளை ஆய்வு செய்தார்கள். கனமழை பெய்யும் மாவட்டங்களின் மாவட்ட ஆட்சிய ருடன் காணொளி காட்சி மூலமாக ஆலோசனை செய்து உரிய உத்தரவு களை பிறப்பித்தார் முதலமைச்சர் அவர்கள். ஒரு கோடி பேருக்குப் புயல் முன்னெச்சரிக்கை குறித்த குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

'டிட்வா' புயலுக்கும், வடதமிழ்நாடு - புதுச்சேரி கடற்கரைக்குமான தூரம் குறைவாக இருப்பதால் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்ய உத்தரவிட்டார் முதலமைச்சர் அவர்கள். தாழ்வானப் பகுதியில் இருக்கும் மக்கள், மாற்று இடங்களில் உடனடியாக தங்க வைக்கப்பட்டார்கள்.

புயல் பாதிப்பு, அதனால் அதிக மழை வாய்ப்பு உள்ள மாவட்டங்களில் முகாம்கள் அமைக்க அரசு உத்தரவிட்டது. தமிழ்நாடு முழுவதும் 6 ஆயிரத்து 33 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 1,449 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டது. இதில் 55 ஆயிரத்து 165 பேர் பயனடைந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் வழங்க 5 கிலோ அரிசி பைகள் - 5 இலட்சம் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. அரசின் முன்னெச்சரிக்கை ஏற்பாடு காரணமாக பெரிய உயிர்ச் சேதங்கள் இல்லை.

பொதுமக்கள் புயல் மழை நேரத்தில் தேவையின்றி வெளியில் செல்ல வேண்டாம் என்று அரசு அறிவித்தது. கட்டுமான இடங்களில் பேரிகேட் போட்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டது.

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், மாநகராட்சி சார்பில் முன்னெச் சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டது.

**சென்னை முழுவதும் 215 இடங்களில் மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, அதில் இருக்கும் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. மழை நீர் தேங்கி இருந்தால் அவற்றை அகற்றுவதற்கு அதி திறன் கொண்ட 1,496 மோட்டார்கள், சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நவீன வசதிகள் கொண்ட 478 இயந்தி ரங்கள் மற்றும் வாகனங்கள், தாழ்வானப் பகுதிகளில் பொதுமக்கள் பாதிக்கப் பட்டு இருந்தால் அவர்களை மீட்பதற்கு 103 படகுகள், 60 நபர்கள் கொண்ட தேசியப் பேரிடர் மேலாண்மை படையினர், 30 நபர்கள் கொண்ட மாநிலப் பேரிடர் மேலாண்மை படையினர் போன்றவை தயார் நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டு இருந்தார்கள்.**

புயல் பாதிப்புகளை எதிர்கொள்ள சென்னை மாநகராட்சி உட்பட்ட பகுதி களில் மாநகராட்சி அலுவலர்கள், பொறியாளர்கள், தூய்மைப் பணியாளர் கள் என 22 ஆயிரம் பேர் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 24 மணி நேர மும் செயல்படும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 22 சுரங்கப்பாதைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழை யினால் சுரங்கப் பாதைகளில் நீர் சூழ்ந்தால் உடனடியாக நீரை அகற்று வதற்கு அதிநவீன மின் மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன. இவற்று டன் கூடுதலாக சுரங்கப்பாதைகள் நீர் சூழ்ந்து பொதுமக்கள் பயன்படாத சூழல் உருவாகினால், பொதுமக்கள் பயன்பாட்டை தவிர்ப்பதற்கு தானியங்கி தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**இங்குள்ள மக்களை மட்டுமல்ல; இலங்கை சென்று அங்கு சிக்கித் தவித்த தமிழர்களையும் தமிழ்நாடு அரசு காத்துள்ளது. கொழும்பு விமான நிலையத்தில் சிக்கித் தவித்த தமிழர்கள் தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியால் விமானம் மூலம் தாயகம் திரும்பி உள்ளனர். துபாயில் இருந்து இலங்கை வழியாக இந்தியா புறப்பட்ட விமானத்தில் 150 தமிழர்கள் உட்பட 300 பயணிகள் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் அனைவரும் இலங்கையில் உள்ள கொழும்பு விமான நிலையம் வந்தடைந்த நிலையில் 'டிட்வா' புயல் எதிரொலி யால் இந்தியா திரும்ப முடியாமல் கொழும்பு விமான நிலையத்திலேயே சிக்கித் தவித்தனர்.**

**150 தமிழர்களும் உண்ண உணவு இல்லாமல், தண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வைக்கப் பட்டது. உடனடியாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசை தொடர்புகொண்டு பாதிக் கப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்ப டுத்தித் தந்தது. பின்னர், தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியின் காரணமாக இலங்கையில் சிக்கித் தவித்த மக்கள் பத்திரமாக தமிழ்நாடு திரும்பி உள்ளனர்.**

"மூன்று நாட்களாக இலங்கையில் சிக்கித் தவித்தோம், தொடக்கத்தில் எந்த ஒரு உதவியும் கிடைக்காமல் இருந்த நேரத்தில் ஊடகங்களில் செய்தி வெளியான பிறகு இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் மூலமாக உதவி கள் கிடைத்தது. அதற்கு முன்பாக அடிப்படை தேவைகள் கூட கிடைக்காமல் அவதிப்பட்டோம். மேலும் வானிலை மோசமாக இருப்பதன் காரணமாக இலங்கையில் இருந்து புறப்படும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதன் காரணமாகவே சுமார் மூன்று நாட்களுக்கு சொந்த ஊர்களுக்குச் செல்ல விமானம் கிடைக்கவில்லை. தூக்கமின்றி உணவின்றி இருந்தோம்.

**இலங்கையில் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ள செய்தி அறிந்து, தமிழ்நாடு அரசு சார்பில் வெளிநாடு தமிழர் வாழ் நலத்துறை அமைச்சர் நாசர் எங்களைத் தொடர்பு கொண்டு பேசினார். தூதரகம் சார்பில் அடிப்படை வசதிகளை வழங்க வலியுறுத்திய பிறகு எங்களுக்கான உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் கிடைத்தது" என்று பேட்டி அளித்துள்ளார்கள்.**

**கனமழையில் இருந்தும், கடல் சீற்றத்தில் இருந்தும் உள்ளூர் மக்களை மட்டுமல்ல; கடல் கடந்து சென்றவர்களையும் காத்துள்ளது தமிழ்நாடு அரசு.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.12.2025) தலைமைச் செயலகத்தில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் 611 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வொண்டர்லா ஹாலிடேஸ் நிறுவனம் அமைத்துள்ள பொழுதுபோக்குப் பூங்காவை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் கலந்து கொண்டார். திருப்போரூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, வொண்டர்லா நிறுவனத்தின் செயல் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அருண் கே.சிட்டிலப்பிலி உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று (டிச.2) திராவிடர் கழகத் தலைவர்

# கி.வீரமணி 93-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – நீதியரசர் ஏ.கே.ராஜன் – கவிப்பேரரசு வைரமுத்து பங்கேற்கின்றனர்!

சென்னை, டிச. 2 -

தந்தை பெரியார், அன்னை மணியம் மையார் மறைவிற்குப் பிறகு, இயக் கத்தை வலிமை யோடு வழிநடத்தியும், நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிகாட்டியாகவும், சமூகநீதித் தடத்தில் தனி முத்திரை பொறித்தும், தந்தை பெரியார்தம் வாழ்வியல் கொள்கை நெறியை உலகளாவிய அளவில் கொண்டு சென்றும். 92 ஆம் அகவையிலும் பம்பரம் போல் சுற்றிச் சுழன்றும் 93 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா இன்று (டிச. 2 ஆம் தேதி) காலை முதல் இரவு வரை பல்வேறு அம்சங் களுடனும், சீரும் சிறப்புமாக சென்னை பெரியார் திடலில் நடைபெறவிருக்கிறது.



**கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் கவியரங்கம்!**

இந்நிகழ்ச்சியில் துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கொள்கை உரை நிகழ்த்துவார்.

மதிய விருந்துக்குப் பிறகு 2.30 மணிமுதல் 5 மணிவரை பட்டிமன்றம், கவியரங்கம், 'மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கழகப் பிரச்சார செயலாளர் வழக் குரைஞர் அ.அருள்மொழி தலைமை யில் பட்டிமன்றமும், கவிச்சுடர் கவிதைப் பித்தன் தலைமையில் கவியரங்கமும் நடைபெறும்.

மாலை 5 மணிக்குத் "தலைமுறை இடைவெளியின்றி" என்ற பொதுத் தலைப்பின்கீழ் கருத்தரங்கம் நடை பெறும். ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., ஊடகவியலாளர்கள் ஜீவசகாப்தன், இந்திரகுமார் தேரடி, திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக் குரைஞர் சே.மெ.மதிவதினி, பெரியார் பிஞ்சு சித்தார்த் ஆகியோர் பங் கேற்று உரையாற்றுவர்.

**நூல் வெளியீடு - வாழ்த்தரங்கம்**

திராவிடர் கழக பொதுச் செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் வர வேற்புரை வழங்க, கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் தலைமையில் நூல் வெளியீட்டு விழா வும், வாழ்த்துரையும் தொடரும்.

கவிப்பேரரசு வைரமுத்து, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி டாக்டர் ஏ.கே.ராஜன் ஆகியோர் நூல்களை வெளியிட்டு உரையாற்றுவர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் அய்.ஏ.எஸ். வாழ்த்துரை வழங்குவார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீர மணி ஏற்புரை நிகழ்த்துவார்.

### மழை பாதிப்பு: வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத்துறை சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் 2.28 லட்சம் ஹெக்டேருக்கு - ரூ.287 கோடி இழப்பீடு!

## வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேட்டி!

**கடலூர், டிச. 2 –**

**வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (சர்க்கரைத் துறை) அன்பழகன், மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் தியாகவல்லி பகுதியில் நிரந்தர வெள்ளதடுப்பு பணி களாக ரூ.81.12 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் அருவாள்மூக்கு திட்டப் பணிகளை நேற்று முன்தினம் (30.11.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

ஆய்வின்போது அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது: -

முதல்வர் அவர்கள் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பல் வேறு முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை மேற்கொள்ள உத்தரவிட் டதற்கினங்க மழை நீர் வடிகால்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை மழை நீர் வடிவதற்கு ஏதுவாக தூர்வா ரப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 239 பாதிக்க கூடிய பகுதிகளாக கண்டறி யப்பட்டு போதிய அனைத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் களஆய்வு மேற் கொண்டு தேவையான உட்கட்ட மைப்பு மற்றும் வெள்ள தடுப்பு பாது காப்பு பணிகளை மேற்கொள்ள



அறிவுறுத்தியதன் அடிப்படையில் நீண்டகாலமாக இப்பகுதி பொதுமக் கள் மற்றும் விசாயிகளின் கோரிக்கை யாக இருந்த அருவாள்மூக்கு திட்டம் அறிவிக்கப்பட்டு, 23.6.2024 அன்று தொடங்கப்பட்டு தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இத்திட்டத்தில் கீழ்பரவனாற்றின் குறுக்கே, அருவாள்மூக்கு என்ற இடத்தில் 160 மீட்டர் நீளம் கொண்ட புதிய தடுப்பணை மற்றும் மக்களின் போக்குவரத்திற்கு 62 மீ நீளமுள்ள புதிய இருவழி மேம்பாலம் கட்டப்பட் டுள்ளது.

மேலும், கடலுக்கு 200 மீட்ட ருக்கு அருகாமையில் 73 மீட்டர் நீளம் கொண்ட புதிய கடைமடை ஒழுங்கியம் அமைக்கப்பட்டுள்ளது. அருவாள்மூக்கு பகுதியிலிருந்து 12.00 கி.மீ. தூரம் சென்று பழைய பரவனாறு மூலம் வெள்ளநீர் கடலில் கலப்பதை தவிர்த்து இத்திட்டத்தின் மூலம் 1600 மீ நீளத்தில் வெள்ளநீர் கடலில் கலக்கும் வகையில் புதிய கால்வாய் அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

பரவனாற்றில் மழை காலங்களில் மழை நீருடன் சேர்த்து நெய்வேலி சுரங்கத்திலிருந்து நீர் வெளியேற்றப் படுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஆற்றின் கரையோரம் உள்ள 24 கிராமங்கள் மற்றும் அப்பகுதிகளி லுள்ள விளைநிலங்கள் வெள்ளநீரில் பாதிப்படைவது தொடர் நிகழ்வாக இருந்து வந்தது. தற்போது அருவாள் மூக்கு பணி நிறைவுறும் பட்சத்தில், பரவனாற்றிலிருந்து வரும் வெள்ள நீர் பழைய மற்றும் புதிய கால்வாய் கள் மூலம் விரைவாக வடிவிக்கப் பட்டு, கீழ்பரவனாற்றின் இருபுறமும் உள்ள 15,600 ஏக்கர் நிலங்கள் வெள் ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்படும்.

இதன்மூலம் அருகிலுள்ள 24 கிராமங்களில் உள்ள மக்களின் குடியிருப்புகள், உடைமைகள் விவ சாய பொருட்கள், மனித உயிர்கள் மற்றும் கால்நடைகள் போன்றவை பாதுகாக்கப்படுவதோடு, புதிய தடுப்பணை மூலம், கடல் நீர் உட் புகுவது தடுக்கப்படுவதால் கடலி லிருந்து கீழ்பரவனாற்றிற்கு மேல் புறத்திலுள்ள சுமார் 23.00 கி.மீ. தூரத்தில் உள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவது முற்றிலும் தடுக்கப் படும். கனமழை காரணமாக விளை நிலங்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. மழைநீரை வெளியேற்ற தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், விளைநிலங்கள் பாதிப்பு கள் குறித்து டிசம்பர் மாதத்திற்குள் கணக்கெடுக்கும்பணி மேற்கொள்ளப் பட்டு உரிய நிவாரணங்கள் வழங் கப்படும். கடந்த ஆண்டு டெல்டா பகுதி உளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும், வேளாண்மை மற்றும் தோட்டக்க லைத் துறையில் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து 28 ஆயிரம் எக்டர் நிலங் களுக்கு சுமார் 287 கோடி மதிப்பீட்டில் இழப்பீடுகள் விரைவில் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு வேளாண்மை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல் வம் தெரிவித்தார்.

ஆய்வின் போது செயற்பொறி யாளர் நீர்வளத்துறை காந்தரூபன், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை 2025ஆம் ஆண்டு தீபத்திருவிழாவை முன்னிட்டு வருகை தரும் பக்தர்களுக்கு கிரிவலம்செல்லும் பாதையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தற்காலிக பேருந்து நிலையங்கள், தற்காலிக வாகனம் நிறுத்துமிடம், மருத்துவ முகாம் அமைவிடம், கழிவறைகள் மற்றும் நடைபாதைகளை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்து பக்தர்களுக்கு தேவைப்படும் போதுமான அடிப்படை வசதிகளை செய்து தருமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், கார்த்தி வேல்மாறன், பிரியா விஜயரங்கன் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.